பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

04 12 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சமூகம் மற்றும் நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் மாற்றுத்திறனாளிகள் சமமாக பங்களிப்பதை அனைவரும் உறுதி செய்ய வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. ஜார்ஜியா நாடாளுமன்ற குழுவினர் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்து பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர்.
3. மத்திய கலால் வரி திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.
4. இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிப்பதற்காக 40 பேர் கொண்ட ஐரோப்பிய யூனியன் குழு இன்று புதுதில்லி வருகிறது.
5. இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சமூகம் மற்றும் நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் மாற்றுத்திறனாளிகள் சமமாக பங்களிப்பதை அனைவரும் உறுதி செய்ய வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மாற்றுத்திறனாளிகளின் சமமான பங்கேற்புடன் மட்டுமே ஒரு சமூகம் உண்மையான வளர்ச்சியடைந்ததாக கருதப்படும் என்று கூறினார்.

நமது நாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் அடிப்படையிலான சூழலை ஏற்றுக்கொள்வது மகிழ்ச்சியளிப்பதாக குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

<<<<>>>>

புதுதில்லி வந்துள்ள ஜார்ஜியா நாடாளுமன்ற குழுவினர் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை நேற்று சந்தித்துப் பேசினர்.

அந்நாட்டு நாடாளுமன்ற தலைவர் திரு. Shalva Papuashvli தலைமையிலான இக்குழுவினர் இரு நாடுகளுக்கிடையே சுற்றுலா, விளையாட்டு, தகவல் தொழில்நுட்பம், மருந்து உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து விவாதித்தனர்.

இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக இருந்ததாகவும், ஜார்ஜியாவில் புதிய இந்திய தூதரகம் திறப்பது குறித்து இருதரப்பிலும் வரவேற்பு தெரிவிக்கப்பட்டதாகவும் குடியரசு துணைத்தலைவர் அலுவலகம் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய கலால் வரி திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

1944ஆம் ஆண்டு மத்திய கலால் வரிச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அடுத்து சிகரெட் உள்ளிட்ட புகையிலைப் பொருட்களின் மீது கலால் வரி மற்றும் செஸ் வரிகளை அதிகரிக்க இதில் வகை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்த விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இது புதிய சட்டமோ, கூடுதல் வரியோ அல்ல என்று குறிப்பிட்டார்.

இது செஸ் வரி அல்ல என்றும், சரக்கு மற்றும் சேவை வரிக்கு முன்பாகவே இருந்த கலால் வரி என்றும் அவர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி அமலுக்கு வந்த பிறகும் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2024ஆம் ஆண்டு வரை இழப்பீட்டு செஸ் வரி விகிதத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் இருந்ததாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிப்பதற்காக 40 பேர் கொண்ட ஐரோப்பிய யூனியன் குழு இன்று புதுதில்லி வருகிறது.

இந்த விவாதங்களின்போது முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

தமிழகத்தில் அரியலூர் - நாமக்கல் இடையே 116 கிலோ மீட்டர் தொலைவிற்கு புதிய ரயில் வழித்தடம் அமைப்பதற்கான விரிவான செயல் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இந்த அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு கள ஆய்வு நிறைவடைந்துள்ளதாகவும் கூறினார்.

மேலும் இத்திட்டத்திற்கான விரிவான செயல்திட்ட அறிக்கை உறுதி செய்யப்பட்ட பிறகு மாநில அரசு உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை மேற்கொண்ட பிறகு ஒப்புதலுக்காக அனுப்பப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்துப் பேசிய திரு. அஷ்வினி வைஷ்ணவ், திருச்சி மற்றும் சென்னையில் உள்ள ரயில்வேக்கு சொந்தமான நிலங்கள் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக பயன்படுத்தப்படும் என்று கூறினார்.

திருச்சியில் உள்ள ரயில்வேக்கு சொந்தமான நிலங்களில் 11 புள்ளி ஆறு இரண்டு ஏக்கர் நிலம் வர்த்தகப் பயன்பாடுகளுக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் 100 கல்வி நிறுவனங்களில் 5G ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மக்களவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்த மத்திய இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் நாட்டில் 99 புள்ளி 9 சதவீத மாவட்டங்களில் 5G சேவை கிடைப்பதாக கூறினார்.

கடந்த அக்டோபர் மாதம் வரை 5 லட்சத்துக்கும் மேற்பட்ட 5G கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேளாண்மை, தொலைதூரக் கல்வி, தொலை மருத்துவ சேவை ஆகியவற்றின் பயன்பாடுகளுக்கு இவை விரைவான இணைய சேவைகளை வழங்குவதாக திரு. பெம்மசானி சந்திரசேகர் கூறினார்.

<<<<>>>>

இந்தியா - ரஷ்யா ஆண்டு உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் இன்று புதுதில்லி வருகிறார்.

இரண்டு நாள் பயணம் மேற்கொள்ளும் அவர் நாளை பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசவுள்ளார்.

அப்போது பிராந்திய மற்றும் சர்வதேச பரஸ்பரம் நலன் சார்ந்த விவகாரம் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.

வர்த்தகம், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலாச்சாரம் மற்றும் ஊடகம் தொடர்பான துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்களை கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் திரு. விளாடிமிர் புதின் சந்தித்துப் பேசவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வாரணாசியில் நடைபெற்று வரும் காசி தமிழ்ச் சங்கமத்தில் பங்கேற்பதற்காக தமிழ்நாட்டின் சேலத்தில் இருந்து நேற்றிரவு 53 பேர் கொண்ட குழுவினர் காசிக்கு புறப்பட்டுச் சென்றனர்.

சேலம், ஈரோடு, தருமபுரி, நாமக்கல், திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு தரப்பினர் இதில் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியாவின் சார்பில் Sagar Bindu என்ற பெயரில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்காலிக Bailey இரும்புப் பாலமும், 500 நீர்சுத்திகரிப்பு உபகரணங்களும் நேற்று விமானப் படை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தற்காலிக பாலம் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட உதவிடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பங்களாதேஷில் டெங்கு காய்ச்சல் காரணமாக நடப்பாண்டில் இதுவரை 391 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

நேற்று மட்டும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் டெங்கு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளுமாறு பங்களாதேஷ் சுகாதார அமைச்சகம் அந்நாட்டு மக்களை அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ராய்ப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 358 ரன் எடுத்தது.

359 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா 49 புள்ளி 2 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 362 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக Aiden Markram 110 ரன் எடுத்தார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை மறுநாள் விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ளது.

--------------

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா, தன்வி கன்னா ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ஜோஷ்னா சின்னப்பா, 6-11, 11-7, 5-11, 11-6, 11-7 என்ற செட் கணக்கில் எகிப்தின் Nardine Garas-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் தன்வி கன்னா, 7-11, 12-10, 14-12, 7-11, 11-4 என்ற செட் கணக்கில் ஹாங்காங்கின் Nga Ching Cheng-ஐ வென்றார்.

-------------

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் தயானந்த் ஷிமோகா, ஆர்யமான் டாண்டன் ஆகியோரும், மகளிர் ஒற்றையர் பிரிவில் இஷா ராணி, பரூவா, அனுபமா உபாத்யாயா, ஷ்ரேயா லீலே, தஸ்னிம் மிர் ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

சையத் முஸ்தாக் அலி கோப்பைக்கான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி இன்று திரிபுரா அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை மணி 4.30க்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>